A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

**மேல்முறையீட்டு மனு எண் 25 / 2022**

திரு. வா. நாகராஜன்,
த/பெ. நா.வாலகுரு,
2/191, வெள்ளையாபுரம் (அஞ்சல்),
அருப்புக்கோட்டை (தாலுகா),
விருதுநகர் மாவட்டம் – 626 112. ………மேல்முறையீட்டாளர்
(திரு. வா. நாகராஜன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ பகிர்மானம்/அருப்புக்கோட்டை,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்,
அருப்புக்கோட்டை – 626 101.

2) உதவி செயற்பொறியாளர்/நகர்/ அருப்புக்கோட்டை,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்,
அருப்புக்கோட்டை – 626 101.

3) உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/பந்தல்குடி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின் பொறியாளர்/பகிர்மானம்,
பந்தல்குடி – 626 113. ...... எதிர்மனுதாரர்கள்
(திரு R. கண்ணன், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/அருப்புக்கோட்டை
திரு. K. சிவக்குமார், உதவி செயற்பொறியாளர்/நகர்/ அருப்புக்கோட்டை
திரு பிரபாகரன், உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/பந்தல்குடி)

**மனு பெறப்பட்ட நாள்: 09-03-2022**

**கேட்புரை நாள்: 21-07-2022**

**ஆணை நாள்: 04-08-2022**

09.03.2022 அன்று பெறப்பட்ட திரு. வா. நாகராஜன், த/பெ. நா.வாலகுரு, 2/191, வெள்ளையாபுரம் (அஞ்சல்), அருப்புக்கோட்டை (தாலுகா), விருதுநகர் மாவட்டம் – 626112 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 25/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 21.07.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

புல எண்.457/3B–இல் நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 சர்வே எண் 457/3B–இல் அமைந்துள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ அருப்புக்கோட்டை அவர்களிடம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய்வு செய்த போது விவசாய மின் இணைப்பிற்கு விண்ணப்பித்த நிலத்தில் சூரிய ஒளி சக்தியினால் இயங்கக்கூடிய பம்பு செட்டானது பயன்பாட்டில் உள்ளது கண்டறியப்பட்டதால் மின் இணைப்பு வழங்க இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனது கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விருதுநகர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், விருதுநகர் மின் பகிர்மான வட்டம், 28.12.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

விருதுநகர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.12.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் ஆணை:*

*மனுதாரர் திரு நாகராஜன், அவர்கள் தற்பொழுது ஆமணக்குநத்தம், வருவாய் கிராமத்தில் உள்ள சர்வே எண் 457/3B என்ற தனது விவசாய நிலத்தில் முறைகேடாக மாற்றி அமைத்துள்ள அரசின் மானியம் பெற்ற சோலார் பேணலை உரிய அனுமதி பெற்ற சர்வே எண் 456/3 என்ற தனது நிலத்திற்கு இடம் மாற்றம் செய்துவிட்டு சர்வே எண் 457/3Bக்கு வீதப்பட்டி எண் IIIA1ல் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்யும் பட்சத்தில் மனுதாரருக்கு மின்இணைப்பு வழங்க உரிய நடவடிக்கைகளை எடுக்க எதிர்மனுதார்களுக்கு உத்தரவிட்டு மனு எண் 04/2021-22 இம்மன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.07.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. வா. நாகராஜன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. கண்ணன், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ அருப்புக்கோட்டை, திரு. K. சிவக்குமார், உதவி செயற்பொறியாளர்/ நகர் / அருப்புக்கோட்டை மற்றும் திரு பிரபாகரன், உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/ பந்தல்குடி, விருதுநகர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 விவசாய மின் இணைப்பு வேண்டி விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, ஆமணக்குநத்தம் வருவாய் கிராமத்தில் சர்வே எண் 456/3 என்ற கிணற்றுக்கு 08/10-11 தேதி 30.10.2010-இல் செயற்பொறியாளர்/பகிர்மானம்/அருப்புக்கோட்டை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும், விவசாய மின் இணைப்பு பெறுவதில் காலதாமதமானதால் வேளாண்மை துறை சார்பில் அறிவித்த சூரிய ஒளி மின்சக்தி மோட்டார் பம்ப் செட் திட்டத்தின் படி சோலார் மின்சக்தி பம்ப்செட் பெற்று 456/3-இல் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றின் மூலம் நீர் இறைக்கப்பட்டதாகவும், அதன்பின் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியலின் "மூப்பு" ரத்து செய்ய சம்மதித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 சிறிது காலத்திற்கு பின் 456/3 என்ற இடத்தில் அமைக்கப்பட்ட கிணற்றில் தண்ணீர் கிடைக்கவில்லை எனவும், ஆகவே 456/3-இன் பக்கத்தில் உள்ள 457/3B என்ற நிலத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து அந்த இடத்தில் சோலார் பேனல் அமைத்து விவசாயம் செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இந்த சோலார் ஆனது காலை சுமார் 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை கிடைக்கும் சூரிய வெளிச்சத்தில் கிடைக்கும் மின்சக்தியினை கொண்டு மோட்டார் இயக்கப்பட்டதாகவும், மேலும் மழைக்காலங்களில் தேவையான நேரத்தில் மழையும் பெய்வதில்லை எனவும், மேக மூட்டத்தினால் சூரிய வெளிச்சமும் போதிய அளவு கிடைக்கவில்லை, ஆழ்துளை கிணற்றில் தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இதை ஈடு செய்வதற்கு இரவு நேரங்களில் தண்ணீர் இறைப்பதற்காக மின் கட்டணத்தை செலுத்தும் வகையில் TF-III-A(1) மூலம் விவசாய மின் இணைப்பு

கிடைத்தால் தண்ணீரை இறைக்கவும், தோட்ட காவலாளி இரவு நேரத்தில் தங்குவதற்காகவும் TF-III-A(1) விவசாய மின் இணைப்புக்காக செயற்பொறியாளர்/ பகிர்மானம்/அருப்புக்கோட்டை அலுவலகத்தில், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், ஆமணக்குநத்தம் வருவாய் கிராமம் சர்வே எண் 457/3B-இல் TF-III-A(1) விவசாய மின் இணைப்புக்காக (சாதாரண விவசாய மின் இணைப்பு பட்டியலில்) பதிவு செய்ய 17.08.2020-அன்று விண்ணப்பம் செய்யப்பட்டதாகவும், இந்த விண்ணப்பத்தை பார்வை எண் செ.பொ/ பகிர்மானம்/அரு/தொ.நு.உ/கோ.விவ/ வி.எண்.120/20-21-இன் மூலம் ரத்து செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 அதனால் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், விருதுநகர் மின் பகிர்மான வட்டத்தில் மேல்முறையீடு செய்ததாகவும், இதற்காக 24.06.2021 மற்றும் 27.11.2021 ஆகிய நாட்கள் கேட்புரையில் கலந்து கொண்டதாகவும், ஆனால் தன்னுடைய கருத்தை ஏற்பு செய்யாததால் விருதுநகர் மின் பகிர்மான வட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய முடிவுரையை பரிசீலனை செய்யுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் சூரியசக்தி மின் மோட்டார் அமைக்கப்பட்ட இடத்தில் மின்வாரியத்தின் மின் இணைப்பு இருந்தால் தான் விவசாய தொழிலுக்கு வறட்சி மாவட்டங்களில் சாத்தியம் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திரு வா.நாகராஜன், த/பெ.நா.வாலகுரு அவர்கள் ஆமணக்குநத்தம் வருவாய் கிராமம் சர்வே எண் 457/3B-இல் விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்ததின் அடிப்படையில் கள ஆய்வில் வேளாண்மைப் பொறியில் துறையிடமிருந்து அரசு மானியத்துடன் கூடிய சர்வே எண் 456/3-க்கு பெறப்பட்ட சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய பம்பு செட்டை உபயோகப்படுத்தி நீர் பாசனம் செய்வதால் விவசாய மின் இணைப்பிற்கு விண்ணப்பிக்கும் நிலத்தில் ஏற்கனவே இலவச விவசாய மின்இணைப்போ அல்லது அரசு மானியத்தின் அடிப்படையிலான சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய பம்பு செட்டானது பயன்பாட்டில் இருக்கும்பட்சத்தில் மின்இணைப்பு வழங்க இயலாது என்ற மின்வாரிய

நடைமுறையின்படி அவர்கள் அளித்த விண்ணப்பம் பதிவு செய்ய இயலாது என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இதனைத் தொடர்ந்து மனுதாரர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 19.4.2021 அன்று முறையீட்டு மனு அளித்ததாகவும், ஆமணக்குநத்தம் வருவாய் கிராமம் சர்வே எண் 456/3-க்கு இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் 084/10-11 நாள் 30.10.2010 பதிவு செய்யப்பட்டதை வேளாண்மைப் பொறியில் துறையிடமிருந்து அரசு மானியத்துடன் பெறப்பட்ட சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய பம்புசெட் பெற்றதின் அடிப்படையில் உரியதுறையின் பரிந்துரையின்படி மேற்கண்ட விண்ணப்பப் பதிவு ரத்து செய்யப்பட்டது என மனுதாரருக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்நிலையில் மனுதாரர் ஆமணக்குநத்தம் வருவாய் கிராமம் சர்வே எண் 457/3B-இல் உள்ள விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்ததின் அடிப்படையில் கள ஆய்வில் மனுதாரர் ஏற்கனவே ஆமணக்குநத்தம் வருவாய் கிராமம் சர்வே எண் 456/3-க்கு வழங்கப்பட்ட அரசு மானியத்துடன் கூடிய சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய பம்பு செட்டை சர்வே எண் 457/3B-இல் இடமாற்றம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டு விண்ணப்பம் பதிவு செய்யப்படவில்லை எனவும், உதவி செயற்பொறியாளர்/வேளாண்மைப் பொறியில் துறை/விருதுநகர் அவர்களிடம் ஒரு சர்வே எண்ணிற்கு வழங்கப்பட்ட அரசு மானியத்துடன் பெறப்பட்டசூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய பம்பு செட்டை பிரிதொரு சர்வே எண்ணிற்கு பயன்படுத்துவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளின் கருத்துரு வேண்டப்பட்டதற்கு அவர்களிடமிருந்து சூரிய ஒளிசக்தியினால் இயங்கக் கூடிய சோலால் பம்பு செட்டினை பிரிதொரு இடத்திற்கு மாற்றம் செய்து பயன்படுத்துவதற்கு இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, வழிவகை இல்லை என்றும் மேலும் மனுதாரருக்கு பிரிதொரு புல எண்ணிற்கு மாற்றம் செய்யப்பட்ட சோலார் பம்பு செட்டினை உடனடியாக அனுமதிக்கப்பட்ட சர்வே எண் 456/3-க்கு மாற்றம் செய்ய வேண்டி தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய பம்பு செட்டினை அனுமதிக்கப்பட்ட சர்வே எண்ணிற்கு மாற்றம் செய்து வேளாண்மைப் பொறியில் துறை, விருதுநகர் அவர்களிடமிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதினை

உறுதி செய்யும் வகையில் சான்றினை பெற்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் விவசாய மின் இணைப்புக்கு விண்ணப்பம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேலும் வேளாண் பொறியியல் துறையும் மேல்முறையீட்டளரின் சோலார் பம்பு செட்டினை புல எண் 456/3–க்கு மீள மாற்றம் செய்யும்பட்சத்தில் தான் புல எண் 457/3B–இல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளது.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளரின் 457/3Bக்கு மின் இணைப்பு III–A(1)–இல் பதிவு செய்ய வேளாண்மை பொறயியல் துறையிடம் இருந்து சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் சோலார் பம்பு செட்டை 456/3Aக்கு மாற்றம் செய்து உறுதி செய்த பின்பு தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலைப்பாடு சரியா என்ற வினா எழுகிறது.

7.3 மேல்முறையீட்டாளரின் **ஆமணக்குநத்தம் வருவாய் கிராமம் சர்வே எண் 456/3–இல் உள்ள விவசாய கிணற்றிற்கு** செயற்பொறியாளர்/அருப்புக்கோட்டை அலுவலகத்தில் **இலவச விவசாய மின் இணைப்பு** விண்ணப்பம் 084/10–11 தேதி 30.10.2020 அன்று பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு மின் இணைப்பு கேட்டு பதிவு செய்யப்பட்ட 456/3–இல் உள்ள கிணற்றில் இலவச விவசாய மின் இணைப்பு கிடைப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தவிர்க்கும் பொருட்டு மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை மூலம் 90% அரசு மானியத்துடன் சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் பம்பு செட்டு மூலம் மின் இணைப்பு பெற்றதாக தெரியவருகிறது.

7.4 மேல்முறையீட்டாளர் வேளாண் பொறியியல் துறை மூலம் 02.12.2018 அன்று பெற்ற அரசு மானியத்தால் சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் பம்பு செட்டு மின் இணைப்பு பெற்றதனால் இலவச விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் 456/3 உள்ள கிணற்றிற்கு அவரது ஒப்புதலுடன் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர்

தெரிவித்துள்ளார். இதனை மேல்முறையீட்டாளரும் கேட்புரையின் போது மறுக்கவில்லை.

7.5 மேல்முறையீட்டாளர் 457/3B–யில் விவசாய மின் இணைப்பிற்காக ஆமணக்குநத்தம் வருவாய் கிராமம் சர்வே எண் 456/3–இல் உள்ள விவசாய கிணற்றிற்கு III–A(1)–இல் 17.8.2020 அன்று விண்ணப்பித்ததாக தெரியவருகிறது. நடைமுறையிலுள்ள வீதப்பட்டி ஆணை எண்.1 –2017 நாள் 11.8.2017இன் படி பத்தி 6.2.9 இல் உள்ள சாராம்சங்கள் கீழ்வருமாறு;

> *"**6.2.9 Low Tension Tariff III-A (1):***
>
> ••••
>
> *6.2.9.1 The contracted load for supply under this tariff category shall not exceed 12 kW.*
>
> ••••
>
> *6.2.9.7 This tariff is also applicable for sericulture, floriculture, horticulture, mushroom cultivation, cattle farming, poultry & bird farming and fish/prawn culture.*
>
> 6.2.9.8 *This tariff is also applicable for pumping of water/supply of water for the purpose of "agriculture and allied activities" as specified in LT Tariff IV provided that the applicant is unable to get supply under LT tariff IV as per the seniority maintained specifically for the purpose of providing supply to Agriculture under LT tariff IV. As and when such applicant becomes eligible to get regular supply under LT Tariff IV (Normal Category) as per the specific seniority maintained for that purpose by the licensee, the supply obtained under LT Tariff III-A(1) for the specific purpose mentioned in this sub clause shall be converted into LT tariff IV (Normal Category). Thereafter, the terms and conditions of LT Tariff IV only will apply."*

7.6 மேலே உள்ள விதியை கூர்ந்து நோக்கும் பொழுது இந்த வீதப்பட்டியானது தாழ்வழுத்த மின்கட்டணம் IV–ல் குறித்துரைக்கப்பட்டவாறு, வேளாண் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளின் நோக்கத்திற்காக நீர்இறைத்தல் / நீர் வழங்கல் ஆகியவற்றிற்கு பொருந்தக்கசுடியதாகும். ஆனால் விண்ணப்பதாரர் தாழ்வழுத்த மின் கட்டணம் IV–ன் கீழ் வேளாண் நீர் வழங்கலுக்கு வகை செய்யும் நோக்கத்திற்காக, குறிப்பாக பேணப்பட்டு வரும் முதுநிலைப் பட்டியலின்படி தாழ்வழுத்த மின் கட்டணம் IV –ன் கீழ் மின் வழங்கல் பெறமுடியாமலிருக்க வேண்டும். மேலும், உரிமதாரரால் இந்த நோக்கத்திற்காக பேணப்பட்டு வரும் குறித்த வரை முதுநிலை பட்டியலின்படி தாழ்வழுத்த மின்கட்டணம் IV-(Normal category)–ன் கீழ் முறையான மின்வழங்கலைப் பெறுவதற்கு, அத்தகைய விண்ணப்பதாரர் தகதியுடையராகிற போதெல்லாம், இந்த

உட்கூறில் குறிப்பிடப்பட்ட குறித்த வரை நோக்கத்திற்காக பெறப்பட்ட மின்வழங்கலின் தாழ்வழுத்த மின்கட்டணம் III-A(1) –ஐ, தாழ்வழுத்த மின்கட்டணம் ஆக மாற்றப்படும் எனவும், அதன்பின்பு, தாழ்வழுத்த மின்கட்டணம் IV–க்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் மட்டுமே பொருந்தும் எனவும் அறியமுடிகிறது.

7.7 பத்தி 7.6 உள்ள விளக்கத்தின்படி வேளாண் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளின் நோக்கத்திற்காக நீர்இறைத்தல் / நீர் வழங்கல் ஆகியவற்றிற்கு தாழ்வழுத்த மின்கட்டணம் III-A(1) –ல் மின்னிணைப்பு கோரும் ஒரு விண்ணப்பதாரர் தாழ்வழுத்த மின் கட்டணம் IV –ன் கீழ் மின் வழங்கல் பெறமுடியாமலிருக்கும் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதால் மின் வீதப்பட்டி III-A(1) –ல் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பதாரர் தாழ்வழுத்த மின் கட்டணம் IV –ன் கீழ் மின்னிணைப்பு பெற பதிவு செய்திருக்க வேண்டும் என அறிய முடிகிறது. அதாவது தாழ்வழுத்த மின் கட்டணம் IV –ன் கீழ் மின்னிணைப்பு பெறுவதற்கான உரிய வழிகாட்டுதல் விதிமுறைகளின்படி தகுதியுடைய விண்ணப்பதாரர் மட்டுமே மின் வீதப்பட்டி III-A(1) –ல் மின்னிணைப்பு கோர இயலும்.

7.8 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் பேரில் விகிதப்பட்டி III–A(1)இல் மின் இணைப்பு வழங்க கள ஆய்வு செய்யப்படும் போது மேல்முறையீட்டாளரின் சர்வே எண் 456/3 ஆமணக்குநத்தம் வருவாய் கிராமத்தில் உள்ள விவசாய நிலத்திற்கு வழங்கப்பட்ட சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் பம்பு செட்டு மின் இணைப்பானது தற்பொழுது சர்வே எண் 457/3B–இல் பயன்பாட்டில் இருப்பதனால் மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டததாக தெரியவருகிறது.

7.9 இந்நிலையில் 456/3–இல் உள்ள சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் பம்பு செட்டை 457/3B–யில் விவசாய நிலத்தில் பயன்படுத்துவது அத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறையில் வழிவகை இல்லையெனவும், வேளாண் பொறியியல் துறை மூலம் மேல்முறையீட்டாளருக்கு அனுமதிக்கப்பட்ட சர்வே எண் 456/3–இல் உள்ள விவசாய கிணற்றிற்கு மாற்ற உத்திரவிடப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் வாதிட்டார். மேலும் சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் பம்பு செட்டை 457/3B லிருந்து 456/3 க்கு மாற்றம் செய்ததை உறுதி செய்யப்பட்ட வேளாண் பொறியியல் துறை சான்றின்

மூலம் உறுதி செய்த பின்பு தான் 457/3Bயில் III-A(1)-இல் மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுக்க இயலும் எனவும் வாதிட்டுள்ளர். எனவே, இது குறித்து விளக்கம் பெற நான் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதியின் மின் பகிர்மான விதி 29(2)-ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"29. மின்னிணைப்புத் தொடர்கள்*

*(2)அ) பண்ணை வீட்டில் வீட்டுப் பயன்பாட்டுக்காகத் தண்ணீர் ஏற்றவும், வானொலி மற்றும் பிற பயன்பாட்டுக் கருவிகளுக்குப் பயன்படுத்தவும் தனி மின்னிணைப்பு தேவையென, ஒரு வேளாண் மின்னிணைப்போடு கேட்டால், ஒரே புல அளவை எண்ணில் (survey field number) / துணைப்பிரிவு புல எண்ணில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புக்கள் தரப்படும்.*

*ஆ) கிணறுகள் / ஆழ்குழாய்க் கிணறுகள், தனித்தனியாக வெவ்வேறு இடத்தில் அமைந்துள்ள நிலையில், ஒவ்வொரு கிணற்றிலிருந்தும். ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் நீர்பாசனம் செய்ய வேண்டிய நிலத்தில் பரப்பளவு குறைந்தது 0.5 ஏக்கராக இருக்கும் பட்சத்தில், ஒரு நில அளவை புல எண்ணில் அல்லது பிரிக்கப்பட்ட ஒரு புல எண்ணில், ஒரு நபருக்கு ஒவ்வொரு கிணற்றிற்கும்/ ஆழ்குழாய் கிணற்றிற்கும் ஒரு வேளாண் மின் இணைப்பு வழங்கலாம்."*

7.10 மேற்கண்ட பத்தியில் பொருள் விளக்கத்தின்படி கிணறுகள் / ஆழ்குழாய்க் கிணறுகள், தனித்தனியாக வெவ்வேறு இடத்தில் அமைந்துள்ள நிலையில், ஒவ்வொரு கிணற்றிலிருந்தும். ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் நீர்பாசனம் செய்ய வேண்டிய நிலத்தில் பரப்பளவு குறைந்தது 0.5 ஏக்கராக இருக்கும் பட்சத்தில், ஒரு நில அளவை புல எண்ணில் அல்லது பிரிக்கப்பட்ட ஒரு புல எண்ணில், ஒரு நபருக்கு ஒவ்வொரு கிணற்றிற்கும்/ ஆழ்குழாய் கிணற்றிற்கும் ஒரு வேளாண் மின் இணைப்பு வழங்கலாம் என அறிய முடிகிறது. ஆனால் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை மூலம் 90% அரசு மானியத்துடன் சர்வே எண். 456 /3-ற்கு அனுமதி பெற்ற சூரிய மின்சக்தியில் இயங்கும் மின்மோட்டாரை தற்பொழுது மின்னிணைப்பு கோரும் சர்வே எண். 457/3B-க்கு மாற்றம் செய்து பயன்படுத்தி வருவதாக அறியமுடிகிறது.

7.11 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை மூலம் 90% அரசு மானியத்துடன் சர்வே எண். 456 /3-ற்கு அனுமதி பெற்ற சூரிய மின்சக்தியில் இயங்கும் மின்மோட்டாரை பயன்படுத்துவதால் இதுசம்பந்தமாக மேலும் விளக்கம் பெற நான் தமிழ்நாடு வேளாண் துறை மற்றும் மின்பகிர்மான கழகம் ஆகிய

துறைகளால் வெளியிடப்பட்ட ஆணைகளை ஆராய்ந்த பொழுது இந்த திட்டமானது மத்திய அரசு (20%), மாநில அரசு (40%) மற்றும் மின்பகிர்மான கழகம் (30%) ஆகியவை இணைந்து 90% மானியத்துடன், பயனீட்டாளரின் 10% பங்களிப்பும் சேர்ந்து செயல்படுத்தப்பட்ட திட்டமாகும். இந்த திட்டத்தின் விதிமுறைகளின்படி அரசு மானியத்தை பெற பயனீட்டாளர் தான் மின்பகிர்மான கழகத்தில் ஏற்கனவே பதிவு செய்த இலவச மின்சாரத்திற்கான உரிமையை ரத்துசெய்ய வேண்டுமென் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஒரு பயனீட்டாளர் அரசின் இரு வேறு மானியத்தை ஒன்றாக பெறுவதை தடுக்கும்பொருட்டே இந்த விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ள நேர்வில் மேல்முறையீட்டாளர் சர்வே எண் 457/3Bல் உள்ள விவசாய நிலத்திற்கான கிணற்றிற்கு விகிதப்படி III–A(1)ல் தான் விண்ணப்பத்தை பதிவு செய்ய விரும்புவதால் அதற்கு முன் அவர் விகிதப்பட்டி IV–இல் (தமிழ்நாடு அரசின் மானித்தின் மூலம் வழங்கப்படும் இலவச மின்சாரம்) விண்ணப்பத்தை பதிவு செய்யவேண்டும். எனவே, சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய பம்பு செட்டினை அனுமதிக்கப்பட்ட சர்வே எண்ணிற்கு மாற்றம் செய்து வேளாண்மைப் பொறியில் துறை, விருதுநகர் அவர்களிடமிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதினை உறுதி செய்யும் வகையில் சான்றினை பெற்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் விவசாய மின் இணைப்புக்கு விண்ணப்பம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

7.12 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, கிணறுகள் / ஆழ்குழாய்க் கிணறுகள், தனித்தனியாக வெவ்வேறு இடத்தில் அமைந்துள்ள நிலையில், ஒவ்வொரு கிணற்றிலிருந்தும். ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் நீர்பாசனம் செய்ய வேண்டிய நிலத்தில் பரப்பளவு குறைந்தது 0.5 ஏக்கராக இருக்கும் பட்சத்தில், ஒரு நில அளவை புல எண்ணில் அல்லது பிரிக்கப்பட்ட ஒரு புல எண்ணில், ஒரு நபருக்கு ஒவ்வொரு கிணற்றிற்கும்/ ஆழ்குழாய் கிணற்றிற்கும் ஒரு வேளாண் மின் இணைப்பு வழங்கலாம் என தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதிகளின் விதி 29–ல் குறித்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் சர்வே எண் 457/3Bல் உள்ள ஆழ்துளை கிணற்றில் ஏற்கனவே தமிழ்நாடு அரசின் மானியத்தின் மூலம் பெற்ற சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் மின்மோட்டார் பயன்பாட்டில் உள்ளதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என நான் கருதுகிறேன். மேலும்

தற்பொழுது பயன்பாட்டில் உள்ள சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய மின்மோட்டாரை அனுமதிக்கப்பட்ட சர்வே எண்ணிற்கு மாற்றம் செய்து வேளாண்மைப் பொறியில் துறையிடமிருந்து பெறப்பட்ட சான்றுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை எதிர்மனுதாரர்கள் பரிசீலினை செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7.0 இல் உள்ள தீர்வுகளின்படி கிணறுகள் / ஆழ்குழாய்க் கிணறுகள், தனித்தனியாக வெவ்வேறு இடத்தில் அமைந்துள்ள நிலையில், ஒவ்வொரு கிணற்றிலிருந்தும்/ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் நீர்பாசனம் செய்ய வேண்டிய நிலத்தில் பரப்பளவு குறைந்தது 0.5 ஏக்கராக இருக்கும் பட்சத்தில், ஒரு நில அளவை புல எண்ணில் அல்லது பிரிக்கப்பட்ட ஒரு புல எண்ணில், ஒரு நபருக்கு ஒவ்வொரு கிணற்றிற்கும்/ ஆழ்குழாய் கிணற்றிற்கும் ஒரு வேளாண் மின் இணைப்பு வழுங்கலாம் என தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதிகளின் விதி 29–இல் குறித்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் சர்வே எண் 457/3B–இல் உள்ள ஆழ்துளை கிணற்றில் ஏற்கனவே தமிழ்நாடு அரசின் மானியத்தின் மூலம் பெற்ற சூரிய ஒளி மின் சக்தியினால் இயங்கும் மின்மோட்டார் பயன்பாட்டில் உள்ளதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேலும் தற்பொழுது பயன்பாட்டில் உள்ள சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய மின்மோட்டாரை அனுமதிக்கப்பட்ட சர்வே எண்ணிற்கு மாற்றம் செய்து வேளாண்மைப் பொறியில் துறையிடமிருந்து பெறப்பட்ட சான்றுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை எதிர்மனுதாரர்கள் பரிசீலினை செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

8.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 25/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு. வா. நாகராஜன்,
த/பெ. நா.வாலகுரு,
2/191, வெள்ளையாபுரம் (அஞ்சல்),
அருப்புக்கோட்டை (தாலுகா),
விருதுநகர் மாவட்டம் – 626 112.

2. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/அருப்புக்கோட்டை,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்,
அருப்புக்கோட்டை – 626 101.

3. உதவி செயற்பொறியாளர்/நகர்/ அருப்புக்கோட்டை,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்,
அருப்புக்கோட்டை – 626 101.

4. உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/பந்தல்குடி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின் பொறியாளர்/பகிர்மானம்,
பந்தல்குடி – 626 113.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
65/1, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.